தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

திங்கட்கிழமை, மே 11, 2015




பண்ணாரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரியில்

# மாணவ -மாணவிகளுக்கு பரிசு வழங்கும் விழா

பவானிசாகர், மே.11– சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரியில் பல்வேறு துறையில் சாதனை படைத்த மாணவ -மாணவிகளுக்கு பரிசு வழங்கும் விழா மற்றும் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு பிரிவு உபசார விழா ஆகியவை நடந்தது. விழாவுக்கு கல்லூரியின் தலைவரும், பண்ணாரி அம்மன் குழுமங்களின் தலைவருமான எஸ்.வி.பாலசுப்ரமணியம் தலைமை தாங்கினார். பெங்களூரை சேர்ந்த கம்ப்யூட்டர் நிறுவன அதிகாரி சோனியா நாக்பால், பண்ணாரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரியின் இயக்குனர் எம்.பி.விஜயகுமார், முதன்மை கல்வி அதிகாரி ஏ.எம்.நடராஜன் ஆகியோர் பேசினார்கள். கோவை லார்சென் அண்ட் டூப்ரோ நிறுவனத்தின் இணை பொதுமேலாளர் கே.ரகுநந்தன் கலந்து கொண்டு, பல்வேறு துறைகளில் சாதனை படைத்த 395 மாணவ -மாணவிகளுக்கு ரூ.4 லட்சம் பரிசு தொகை வழங்கி பேசினார்.

விழாவில் கோவை சங்கரா கண் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் ரமணி, பண்ணாரி அம்மன் பள்ளிகளின் செயலாளர் ஏ.என்.குழந்தைசாமி, பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலையின் பொதுமேலாளர் கந்தசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக கல்லூரி முதல்வர் டி.சரவணன் வரவேற்று பேசினார். முடிவில் மாணவி பாரதி நன்றி கூறினார்.